
உ.

கடவுள் துணை.

சுப்பரதிரக் கவிராயர் இயற்றிய

நாடகம்

கூளப்ப நாயகன் காதல்.



காப்பு.

வெண்பா.

பேராரும் பெருநைப் பெரியகா கேந்திரன்மேற்
சீராரு காதலையான் செப்பவே - நேராரும்
அக்கனித ரசசொலிமு னப்பனைவ லத்தில்வரும்
கைக்கசமு கக்கடவுள் காப்பு.

பொன்மாது மேவுதிம்ம ராயரருள் பூண்டிருக்கும்
நன்மா நிதிபெரிய நாயகன்மேற காதல்சொல 1

வந்துதவு சொன்மதுர வாக்குதவி யெப்பொருளுந்
தந்துதவ வேண்டுமெங்கள் தந்தி முகத்தோனே 2

ஆளும் பெருமா ளகோபிலே மால் மெய்யருளெந்
நாளும் பெரும்பெரிய நாயகன்மேற் காதல்சொல 3

ஏடு மணிவடமு மேந்துஞ் சரஸ்வதியே
யாடுமயி லேறிவரு மையனே முன்னடவாய் 4

கோமுனிவர் கொண்டாடுங் கூடற் பரஞ்சோதி
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாத நானமறவேன் 5

நாட்டு புகழ்ப்பெரிய நாயகன்மேற் காதலைநான்
சூட்டுகவி நாவலர்முன் சொல்லத் துணிந்ததுதான் 6

தானந்த தவயோக தத்துவமில் லாவொருவன்
ஞானந் தெளிந்தவர்க்கு நல்லறிவு சொல்வதொக்கும் 7

தெள்ளமுத மூட்டியுரை திருத்தி வளர்த்தெடுத்தோர்
கிள்ளை குழறுமொழி கேட்டு மகிழ்வதுபோல் 8

சீற்ற முடனேதான் சிவிகைதனி லேறுமுன்னே
வேற்றரசர்பின் னிடப்போர் வென்றுவருசேனையினான்

கற்கோட்டையென் றவர்மேற்கண்சிவந்துகண்டவா செம்
பொற்கோட்டையென்னப் புகழுநிலைக் கோட்டையினான்

சிந்தமகூளேந்த்ர செகராசன் கண்மணிபோல
வந்ததுரை சிங்கமெங்கள் மால்பெரிய நாகேந்த்ரன் 24

வாணிபுகழ வல்லரக்கர் வார்குலத்தைக் கொண்டுவந்த
தோணியெனும் பெஞ்சைத் துரைபெரிய நாகேந்த்ரன்

பொன்னிலங்க வச்சப் பொடியிலங்கப் பொற்கதவு
முன்னிலங்கப் பின்னிலங்க முந்திலங்கு வாசலினான் 26

ஒட்டகட மானத் தொலிமுழங்கப் பேரிகைதம்
பட்ட முழங்கப் பரிமுழங்கும் வாசலினான் 27

கட்டிவருஞ் சிங்களத்தார் கப்பம்வரக் காரானைக்
குட்டிவரச் சீனர்திறை கொண்டுவரும் வாசலினான் 28

ஆடை வழங்க வனம்வழங்க யாசகர்க்கு
மாடை வழங்க மனுவழங்கும் வாசலினான் 29

சேலாடுங் கூர்விழியார் சென்றாடக் கைவசந்தன்
கோலாடப் பங்கயப்பெண் கூத்தாடும் வாசலினான் 30

மாமறைநூல்பொய்த்தாலும் வாரிதிநீர்பொய்த்தாலுஞ்
சோமரவிபொய்த்தாலும்சொன்னமொழிபொய்யாதான

அண்டர் தருவுக்கு மருங்காம தேனுவுக்குங்
கொண்டல் தனக்குங் கொடைபயிற்று செங்கரத்தான்

சித்தசரா சேந்த்ரன் திருமலை கண்டமன்னன்
மைத்துனவே ளாக வரும்பெரிய நாகேந்த்ரன் 33

நீளும் பெருவாழ்வு நீதிகளு மேலோங்க
ஆளும் புவிபுரக்கு மந்நாளி லேயொருநாள் 34

ஆரணஞ்சேர் வையை யருந்தீர்த்தந் தானாடி
நாரணனைத் தான்போற்றி நாமதீர்த் தம்பருகி 35

மிக்ககன காரியப்பேர் வித்துவ சனங்கள் துரை
மக்களுட னின்பரச வர்க்க வமுதருந்தி 36

சந்தனங் கஸ்தூரி சவ்வாது கதம்பம்பூசிச்
சுந்தரஞ்சேர் முத்துத் துராயிலங்கப் பாகைகட்டி 37

மாணிக்கம் பச்சை வயிர வயிடூரியத்தா
லாணிப்பொன் னாற்சமைத்த வாபரணமுந் தரித்து 38

சங்கீதம் பாடச் சகல சனமும்போற்றச்
சிங்கா சனக்கொலுவிற் றேவேந்த்ரன் போலிருந்தான்

அந்தமணிமண்டபமா மாஸ்தானந் தன்னிலையன் [ன்று
சிந்தையுற் றுவேட்டையின்மேற் சென்றுவரவேண்டுமெ

கட்டியனை நோக்கிக் கனவேட்டைக் காரருக்கு
பட்டணத்துச் சேனை பதிகளுக்குஞ் சொல்லுமென்றான்

அங்கிருந்த கோமா னரண்மனையி லுட்புகுந்து
தங்கரேக சென்னத் தயங்குநிசார் தொட்டிறுகி 42

துப்பட்டா கட்டிவச்ரச் சோடிட்டுத் துணிகட்டி
யொப்பிட்டா கச்சை யுடைப்பட்டை பூடுகட்டி 43

வர்ன மணியாழி வனசமலர்க் கையிலிட்டுச்
சொர்னமய மாய்ச்சமைக்க கோர்கவசங் காலிலிட்டு 44

வாய்த்த வுறைவிட்டால் மருவலர்கள் மார்புறையாப்
பாய்ந்த சமுதாடு பாக்கணைத்து விற்பிடித்து 45

கேழல் புலியானைக் கெர்வங் களையடக்க
யாளி மலைமுழைவிட் டலறித் தெழுந்ததுபோல் 46

புள்ளிருந்த கூர்நெடுவேற் போசன் னரண்மனையி
லுள்ளிருந்து கோட்டை யொலிமுகத்து வாசல்வந்தான்

கொற்றக் குடைபிடிக்கக் கொட்டுதப் பேரிகையும்
வெற்றிமுர சந்தொனிக்க வீரனெனத் தான்முழங்க ()

காலின் கடுமைதனைக் காற்கடுமை யாக்குமிதன்
காலின் கடுமையெனுங் கந்துகமேற் கொண்டருளி 49

வெற்றிவடி வாள்பிடித்து வெம்பரியின் மீதேறிச்
சுற்றமெனச் சுற்றுந் துரைமக்கள் சூழ்ந்துவர 50

வீரியப்ர தானிகளு மெச்சுதளகர்த்தர்களுங்
காரியப் பேர்மணியக் காரர்களு மீசர்களும் 51

தாக்குதடி யூழியர் தாய வசீகரரும்
ஆக்கமிகு சேனையானை குதிரைக் காரர்களும் 52

ஆசையில்லா ராணுவப்பே ரந்தனையுஞ் சோடுகட்டிக்
கச்சைகட்டி யாயுதமுங் கையுடனே முன்னடக்க 53

சிங்கத்தலை யாளியுஞ்சென் குத்தி வெங்கேசரியைத்
தங்கப் பதக்கத் தனைவாங்க வேணுமென்றும் 54

கண்ட பெரும்புலியைக் கைக்கோடா லேகொன்றுகுத்தி
தண்டை மிருகந் தனைவாங்க வேணுமென்றும் 55

நாட்டுஞ் செயப்புலியைச் சுட்டுந்த வெம்புலித்தோ
லொட்டும் பரிசைக் குதிக்குயர வேண்டுமென்றும் 56

வெண்கவரி யெங்களிடம ராயருக்கு வீசவெண்ணே ம்
வண்கவரிமானைவெட் டிவால்துணிக்க வேண்டுமென்று

வெறுமுடிபடைத்தபட்டிபனை மாக்குடையப் பண்ண
குத்திப் புலிநகங்கள் கொண்டுவர வேண்டுமென்றும் ()

கொண்ட லினைய குடியாளர் முடிமயிர்க்கு
மண்டு கருங்கவரி வால்துணிக்க வேண்டுமென்றும் 59

வாய்த்த கரடி மணியிரற் பிச்செடுத்துக்
கூத்திக் கிடுமருந்து கூட்டிடவே வேண்டுமென்றும் 60

ஒன்றோன் றொருவர் மனத்துற்றுச் சிலரேக
வென்றி வெடிக்காரர் வேற்காரர் முன்னடக்க 61

தானை பிடித்த சவளப் பெருக்கமுயர்
வானம் விழுதுவிட்ட வண்ணமாய் முன்னடக்க 62

கொண்டேகுந் தன்மேளக் கொள்கைபோற் பேசுமுகி
லுண்டோ விலையோவென் றொட்டகம ணைந்துவர 63

கொட்டுந் துடியுங் குறித்தகரிக் கொம்புகளுங்
கட்டும் பெருவலையுங் கைவேட்டைக் கத்திகளும் 64

காட்டுப் புலிக்கழுதைக் கௌவும் புலிபோலக்
கூட்டமிட்ட ஞானிகளுங் குத்திட்டி யுங்கவணும் 65

சால்வயிறு முன்றுமுழத் தாடிகளுஞ் செந்தலையுங்
காலிலிடு தோலடியுங் காங்கிட்ட கச்சையுமாய் 66

கானவர்கள் வந்துகண்டு கைகுவித்து முன்னோடச்
சேனைநடு வெள்ளைச் செய்யா லிணைத்துவர 67

போயனுமன் பாய்ந்த புகழ்பொரு மற்கதிரைப்
பாயத் திரிவதுபோற் பைங்கருட்டா லேக 68

சந்த்ரோ தயம்போற் றயங்குஞ் சுருட்டிவரச்
செற்றுளி கண்டுவட சீனங் குடிவாங்க 69

தம்பட்ட வோசை தனக்குமக தங்கலங்கக்
கொம்புத் தொனிகெட்டுக் கொச்சி மலையேற 70

மங்கலஞ் சேர்நகர் வாழ்பெரிய நாகேந்த்ரன்
எங்கள்பிரான் வேட்டைக் கெழுந்தருளு மவ்வழியில் ()

போத்தொன் றிடத்திருந்துபோய்வலத்தோர்பூமரத்தில்
வாய்த்தபே டொன்றை மருவிக் குரலெழுப்ப 72

மண்டலிகர் கண்டனெனு மால்பெரிய நாயகவுத்
தண்டனது கண்டுநகை தந்து மனமகிழ்ந்து 73

ராச சகுனமென்ன ராசேந்த்ரன் றன்னோடி
போசனையி னற்சகுன வுண்மையறிந் தானொருவன் 74

வந்தெதிரே போந்து வலம்பாயக் கண்டதனால்
உந்தவிட வேட்டை முழுவேட்டை யாய்கிடக்கும் 75

உக்கின் வனப்பெட்டைக் குரலெழுப்பிக் கூடியதற்
கக்குள் வசமாகவின் றேர்கனனி மணம் கூடுமென்றான்

அவ்வார்த்தை சொலலமகா ராசனுங் கூளேந்த்ரன்
மமையைத்த பன்றி மலைச்சாரல வந்தணுகி 77

நாலிட முங் கானவரை நாடிவலை கட்டவிட்டு
சோலியகட் டாப்பிற் குழற்கார னைநிறுத்தி 78

ஏறும் பரிவிட் டிறங்கிப் படைக் கலிப்பு
ம் றந் தோனிறாக சேகங்கள் போல்முழங்க 79

வேளாளும் வில்லாளும் வெகுபேறி பட்டிக்
காலாளு மாய்ப்பார்த்து காட்டைக சலைக்குவிட்டார் 80

பன்றி மூபால்கரடி பாய்புலிபுல் வாய்கடமா
ஒன்றொ டொன்றுதா னொன்று கலைந்து சலைமோட 81

வாரும் வேலா லெறிவாரு பொனைறபொன்றா
மெய்வாருமு சுற்றி மறிப்பாரு மாய்நெருங்க 82

கட்டாப்பில் வந்த கடமானைப் பிணவாங்க
ஒட்டாமற் குத்தி யொளியிருக்க பேரிழுக்க 83

சுட்ட புகைவழிபோ லாகவெரும பன்றியுடல்
தட்டுருவி யோடத் தகட்ட லயில் வேல்பாய 84

வாலடித்து மேல்பதுங்கி வாய்பிளக்க வாய்கிழிக்க
வேல்பிடித்து வீரருத்த வீழ்புலிகது மேலதடிக்க 85

வல்லயில் விழு கரடிமுயல மறையின்மிசை ஞமலிவிழ
அலகின்மிசை பிடரின்மிசை பாடிகள் உடல்பதற 86

செவ்வியோன் வேசிகையிற் சிக்கி யுழல்வதுபோற்
கவ்விய நாய்க்காலிற் கவரிமான் வீழ்ந்துழல 87

கூடு மயிற்கூட்டம் கொடுக்கின்ற தாதாவைப்
பாடும் புலவோர் கலிபோற் பறந்தோட 88

வட்டமுலை மின்னார் மயக்கறுத்த யோகியைப்போற்
கட்டு வலையறுத்தோர் கான்மேதி போனதுவே 89

கொட்ட மிடும்புலியைக் குண்டுதுன் றங்குழலால்
சுட்டதொனி வெற்பைத் தொடர்ந்து சிலையோட 90

எம்மா னிடப்புலியு மிந்துமுய லும்மானுங்
கைம்மானுஞ் சற்றே கலங்கி மனந்தேற 91

இவ்வண்ண மைய னியல்வேட்டை யாடவொரு
செவ்வண்ண மான்வலையின் சிக்காம லேகுதித்து 92

பற்றிவரும் பேர்க்கும் பதிகுழற்கு மொட்டாமல்
உற்றகவி வாணரைக்கண் டோடு முலுத்தரைப்போல்

போங்கடுமை கண்டு புகழ்பெரிய நாகேந்த்ரன்
வாங்கு சிலையும் வடிக்கணையு மாய்விரைந்து 94

மானோடப் பற்றியன்று வந்தாகு ராமனைப்போல்
தானோடப் பின்னோடித் தாவிக் குதிகுதித்து 95

பாரிலிற கில்லாத பட்சிபோற் செல்லநெடுந்
தூரந் தொடர்ந்து தொடுங்கணைக்குப் பூசையிட்டான்

மால்தொடர்ந்த மானோர் மயிலைப் பிரித்ததையன்
கால்தொடர்ந்த மானோர் கருங்கயிலைக் கூட்டியதே 97

சோலையுள் நுழைந்தமை.

சிங்கத்தின் குட்டி சிலையேந்திச் செல்வதுபோல்
அங்கொருபூங் காவில்விடா யாறத் தனிப்புகுந்தான் 98

துன்று தடஞ்சுனைநீர் தோய்ந்துமலர்த் தாதளைந்து
தென்றல்வந் தெனையன் திருமுகத்தின் வேர்வகற்ற 99

கற்பகக்கா விந்திரனைக் கண்டுமலர் சிந்துதல்போற்
பொற்புடையோன்மெய்குளிரப் பூங்கானப்பூச்சொரியச்

சந்தனத்தின் மீதிருந்து சஞ்சரிக்கும் பைங்கிளிகள்
சித்தமன்சேய்க் கின்பம்வரச் சிந்து கவிபாட

இங்கிருக்கும் வேளை நல்ல வேகாந்த வேளையென
மங்கைநல்லாள் தூதுவிட்ட வண்டுபோல் வண்டிரைய

மையல்கொண்ட மன்னனுக்கு மாலையிட வந்துநின்ற
தையலார் போலச் சரக்கொன்றைக் கொம்பிலங்க

நங்கோன் துரைபெரிய நாகேந்த்ர னவ்வனத்தில்
சிங்காரம் பார்த்துலவிச் சிந்தை மகிழ்போதில்

நவரத்தினமாலை என்ற மாதொருத்தியைக்கண்டமை.

சாதியொரு நான்கின்முதற் சாதி பதுமினியா
மாதுநவ ரத்தின மாலையெனும் பெண்பெருமான்

மதன கலைவாணி மதன சுரதானி
மதன ரதிக்கேணி மதனசுப கல்யாணி

காம குருபீடங் காமக் கொலுக்கூடங்
காம கிரீடமின்பக் காமக்கட லோடம்

மாமுனிவர் வேதவங்க மாமுனிவ ரந்தரங்க
மாமுனிவ ருதுசங்க மாமுனிவர் பிராணலிங்கம்

தெய்வ ரதிதேவி தெய்வ குணவாவி
தெய்வச் செழுங்காவி தெய்வமலைச் சஞ்சீவி

கம்மியன்கை யாலடித்துக் காய்ச்சிவெட்டித் தீராமல்
செம்மலரோன்கைம்மலராற்செய்துவிட்டபொற்பாவை

வாய்பேசா வண்ண மதிலொட்டி நில்லாமல்
தாய்பேசப் பேசியின்பந் தந்துலவு ரூபசித்ரம்

கையாற் பிடித்தொருவர் கட்டவிதழ் கன்றாமல்
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலை

காற்றிலடி பட்ட இலந்தை கன்று திரும்பாமல்
போற்றிய வார வளர்த்தெடுத்த கரும்பு

மொய்க்கு மணக்குமலர் மகரந்த மது பொடாமல்
மெய்க்குடனை பெற்றதைய வீரமருக்கொழுந்து

பொங்கச் சிவந்த கதுக்குப் புழுங்காமல்
தங்கநிற மாகச் சமைந்த மணப்பாகு

ஓங்கு பகலெட்டி [illegible] தூங்காமல்
ஆங்குசப்ப மஞ்சனை தாங்கு நவரசத்தேன்

மொய்த்த மலைக்காட்டு மூன்று டலையாமல்
பெத்தைகளின்மேல் [illegible] தோகைமயில்

கொய்துகொடியும் போதுதாவிக் கூவித் திரியாமல்
[illegible] குயிற்பேடு

கொஞ்சு மொழியுமக் கட்டித் திடமாமல்
செஞ்சொல் [illegible] பேடு

கன்னி [illegible] கற்பித்த பேடை மன்னர்
தனதோ நடைபயில் [illegible] அன்னப்பேடு 120

தேய்ந்துபோய் [illegible] போகாமல்
தேர்ந்துபோய் [illegible] சாதிரூபத்து

ஒப்பமிட்ட வெள்ளியாக இடாமல்
செப்பமிட்ட [illegible] சொர்ணம்

தீருநா காமன் [illegible] வைத்த
மாருப [illegible] ரம் [ப்பேற்

[illegible] மணிக்குட்பாவை
[illegible] பெண்ணரசு

[illegible] பாக்கியைப்பார்த்
[illegible] கண்ணி [illegible] அடிக்குதென்றான்

தோழி யிட்டப்பால் முடிக்கு தெனவுரைக்க
வாளிநெறு வெட்டிப் படித்த வரிவிழியாய்

கன்னி கழியாத காரிகையே யின்றுனக்குச்
சொன்னே னதிகசுப சோபனமுண் டாகுமென்றாள்

பாங்கியுரை கேட்டுமற்றைப் பாங்கிமார் தம்முடனே
பூங்குழலாள் கர்வின்மலர் பூவெடுக்க வேண்டுமென்று

பச்சைப் பரிமளங்கள் பாங்காய்க் கலந்தரைத்த
கொச்சி மஞ்சட்பூசிக் குளித்ததிரு மேனியின்மேல்

சாந்து புழுகுசவ் வாதுகதம் பம்பூசிக்
காந்திதர வெண்சலவைக் கண்டையிட்ட சேலைகட்டி

காவி வரிநெடுங்கட் காரிகைக்குப் பாங்கியர்கள்
சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக் குழல்முடித்து

மையெழுதிப் பொட்டெழுதி வட்டமிட்ட கொங்கைககு
தொய்யி லெழுதித் துணையடிக்குப் பஞ்செழுதி

ஆடகப்பொன் மெட்டிட் டழகவெள்ளி தண்டையிட்டுப்
பாடகங்க ளிட்டுப் பசும்பொற் சதங்கையிட்டு

முத்தாரமேகலைமேன் மூன்றடுக்குப்பொன்னரைஞாண்
வைத்தாரக் கட்டி மருங்கொட்டி யாணமிட்டு

செய்ய கொடிப்பவளஞ் செம்மணிக ளின்றதுபோல்
கைவிரலுக் கேற்கரத்னக் கல்மோதி ரங்களிட்டார்

கட்டிப் பவளங் கனகவளை பொற்கடகந்
தட்டுச் சரியைச் சரி ராகக் கைக்கணிந்து

பட்டு ரவிக்கையிட்டுப் பட்டையப்பொற் காறையிட்டு
வட்ட மார்பிலங்க வச்ரச் சவடியிட்டார்

மோகனப்பொன் மாலையிட்டு முத்துமணி மாலையிட்டுப்
பூத்தை வச்ரமணிப் பூஷணங்க ளால்மறைத்தார்

வாய்க்கு மொருவட்ட மதியொருமுத் தின்றதுபோல்
மூக்குத்தி முத்து முகத்துக் கிணங்கவிட்டார்

கொத்தளப்பொன்னோலையிட்டு கொப்பிட்டுவாளியிட்டுச்
செந்திருவிற் கேற்கத் திருவும் பிறையுமிட்டு

கொண்டைச் சுருட்டுமுத்துக் குச்சிட்டுக் குப்பியிட்டுத்
துண்டப்பிறைக்கிணங்கச் சுட்டியொன்று கட்டவிட்டார்

பூட்டினார் பொற்சிலைக்குப் பொன்னிடுவார் போலுடை
சூட்டினார் பூமாலை சுற்றினார் தோழியர்கள் [டைய

ஞாலம் புகழும் நவரதன மாலையினாள்
கோலஞ் சிறந்தமலர் கொய்யவென்று தானடந்தாள்

வங்கார மாலைமுத்து மாலை குணமாலை
சிங்கார மாலை திகழ்மோ கனமாலை

சம்போக வல்லி சரசவல்லி காமவல்லி
அம்போ ருகக்கண் ணமிர்தவல்லி நீலவல்லி

மோகரத்ன மாதுரத்ன முத்துவடந் தந்தரத்ன
நாகரத்ன மெனனுமந்த நல்லவுயிர்ப் பாங்கியரும்

தானுமா யந்தமலர்ச் சண்பகப் பூங்காவனத்தின்
மானினங்கள் சூழ வருப்பிடிபோல் வந்தணுகி

கொம்புமலர் வண்டெழுந்து கோகனகப்பூவெனச்செங்
கைமலரைச் சீற்றக் கடுகிமலர்ப் பூவெடுத்தாள்

பூங்கொடிபோல் நின்றலவிப் பொன்னனையாள் பூவெடு
பாங்கிமா ரெல்லாம் பரந்தோடிப் பூவெடுத்தா [க்கப்

வானையொத்த செங்கருங்கண் மானார் மதராசன்
பாளையத்தைக் கொள்ளையிடும் பண்பாய் மலர்பறித்தார்

அங்குநின்ற பெண்களெல்லா மங்கங்கே போய்மறைய
இங்குநின்ற பேதை யினம்பிரிந்த மான்போல

மெல்லத் தனிநடந்து வெட்சி யிருவாட்சி
மல்லிகை செவ்வந்தி மலர்பிச்சிப் பூவெடுத்து

தோட்டுப்பூ முல்லைமுதற் றாயசெண்டப் பூவெடுத்துக்
கோட்டுப்பூ மீதிலநந்தக் கொம்பனாள் மாலானாள்

காவி யிரண்டிருக்கக் கஞ்சமல ரிருக்க
பூவினிறங் குன்றாப் புன்னைப் பூவிருக்க

கோங்கரும்பிரண்டிருக்கக் கோவையிட்ட முல்லைமுகைப்
பூங்குமுகத் தாளிருக்கப் பூஞ்சம்பகமிருக்க

பூதலத்திலே நான் பொதிவைத்தனப்பவாபோல
மாதரசி பூத்த மரந்தோறுஞ் சென்று

சாதிநறுஞ் சண்பகமே நாளுநான் தந்தேயே
கோதிக் குழலுமுடிக் கக்க கோலமுடன் தாரீரோ

மருதாணை போலெருந்தி மாயரே நீரெனது
சந்தாபந் தீரத் தரிக்கமலர் தாரீர்

பாதிரியே காவிற் பனிநீர பருந்தேமே
மாதவியே நீரெனக்கு வண்ணமலர் தாரீரோ

வினைதீர்ந்த புன்னை விருட்சமே குங்குமமே
அணைந்து நிற்கும்பெண்ணாக் காமலர் தாரீரோ

அய்யிட்ட கண்ணறு ரநன்றலிருங்கனை நாண்
கும்பிட்டேன் கோகிலங்காள் குழுமலர் தாரீரோ

என்ற வுரைகேட் டெழுந்துமிகு பூங்கிளியுங்
கன்றிமனை தாணியந்தக் காவிச் சுத்தோதாங்க

பூமரத்தி னிழலிலோர் பூங்கொம்பால் நின்றலவித்
தாமநறுங்குழலி தானொருத்தி நின்றாள்

வந்து மினமுலைப்பெண் ணேகமாயிருக்க
நாந்தகலீ ரன்பெரிய நாகமகூத்தரானை

பண்டு தனைவென்ற பகைதீரக் காமனுங்
கொண்டு சிலைவெல்லக் கூரம்பு தேர்தல்போல்

வண்ணிலவும் போது மலர்ந்தபெருஞ் சோலைவளங்
கண்ணிலவும் போதிலெதிர் கண்டான் விழிகுளிர

நீராயி னுளோ திசதாகக் கன்னிகையோ
சூராயி னுளோ சுரலோக மேனகையோ

கன்னிகையு மன்னனிலிட்ட காலு மனத்திசைத்த
வெண்ணை மகற்றிப்பா விவ்வுலகின் பெண்ணரசே

என்றடுத்து மின்னு மிருசெவிக்கு மின்பமுறக்
குன்றடுத்த பூங்காவிற் கோமா னுரைக்கலுற்றான்

மாதே இருக்கு மூலகே தமது திருப்
பேரேது வார்த்தையொன்று பேசினு லாகாதோ

ஐவிரலிக் குள்ளே யமர்ந்த சிவனார்க்குத்
தெய்வ வடிவெடுத்த சேயிழையு நீர்தாமோ

பத்தெழுப்புங் கையாற் பரனெரித்த மன்மதனை
வைத்தெழுப்பிக் கொண்ட மகராசி நீர்தாமோ

பண்டு நளரூபம் பலரெடுக்க வேதனளைக்
கண்டுமண மாலையிட்ட காரிகையும் நீர்தாமோ

தெய்வரம்பை யின்னார் திருவழ கெலாந்திரட்டிக்
கைவருந்த வேதனுமைக் கற்பித்து விட்டானே

என்பட்ட மென்னுவரு மிந்திரனார் பட்டமெலாந்
தன்பட்ட மாக்குஞ் சமர்த்தியார் நீர்தாமோ

தென்டிரையி லோடிமலைச் சென்றேறி வாய்வெருவிக்
கொண்டல் திரிவதுங்கள் கூந்தலுக்குத் தோற்றலவோ

தேய்ந்த பிறையுங்கள் திருநுதலென் றுலகிலே
[illegible]ய்த்தடனிச் சுட்டி யணிந்திருக்க வேணுமோ

பூமன் விளைத்த புருவத்துக் கந்தாதி
காமன் விளைத்த கருப்புருவ மொப்பாமோ

அவ்வேதங் கொண்ட வருங்கயல்போல் வேதனினி
எவ்வேதங் கண்டு படைத்தா னிருவிழியை.

சனகல்வேள் கீர்த்திப்பிர தாபம் புரிந்தகொலை
வன்னமென மூன்று பிருப்பதுங்கள் வாள்விழியே

வன்னியைப்போருக்கொதுங்கெனவாள்வேல்படைகொ
மென்மலர்க்கணைவிழிப்புகழ்ச்சபுற்றேன் [ஆங்கேன்

நாகமுக் குத்திரத்துக் காகாக் குமிழையுங்கள்
மூக்கருவைச்சொன்னால் புத்தமிழோர்க் கொவ்வாதே

மாங்கனிப்போலென்றாய் வள்ளிகாதொக்குமென்றும்
பாங்கிருவைமொன்றேனடல் வரிசைகென்சொலுவேனா

விருந்து நாடிக் கலியாணர் மெல்லிதழின் றுலிதிலே
புத்தம் கிடைகதுமுனிஸ் முத்தங் கொடை பாதே

நுப்பமான வுங்கள் இதழ் முகத்திருகோர்
உப்பாமா ஒருசெப்பெனவே பொருமோ யுருதங் காவேனோ

சங்கமுத்தை ஒன்றென தவிசருத்தென் றுயிரால்
பங்கமுத்தம் தோஷ பதிற்றிய மொட்டாதே

தோளுக்கு மூங்கிலினை சொல்லும் பொருந்தேசதி
நாளுக்கு யின்மணியை நாவருந் சொல்வாரே

காந்தள் வளருசென்றதுங்கள் மைபோலுந்தானிருக்க
வாயதக தவச்செய்து வரப்பெறாவே மென்றவேயா

தம்புருவை மீட்டியிசை தந்திதனி லேற்றியாச்
செம்பவள மூங்கள் சிறுவிரலுக் கொப்பாமோ

பார்த்தைக்குத் தோற்ற யனக்கிளியன் மூக்குநிலை
சேர்த்ததக மென்றுமயைச் செப்பினு மொப்பாமோ

பாவினியல் கண்டுபல பாடித் தெரிந்துபெருங்
காவியத்தைப் பாடிக் கவிஞராங் கேற்றுதல்போல்

முந்தச் செழுங்கமலத் துள்ளே முளைத்தெழுந்தோன்
தந்தச் சிமிள்படைத்துத் தாளவட்டந் தான்படைத்து

வம்பைச் சமைத்து வடிவுகண்டு மால்யானைக்
கொம்பைச் சமைத்துக் குணஞ்சற் றதிலரிந்து

தேங்காயைச் செய்து திரட்சிகண்டு பொற்குடத்தைப்
பாங்காகச் செய்து பணைப்பதிலே கண்டறிந்து

விந்தைகரு மேருமுதல் வெற்பெல்லாஞ் செய்தவன்கை
வந்ததற்பி னுங்கள் வனமலையைச் செய்தானே

காமனறி யாமல்வைத்த கண்கருப்புப் பாய்ந்ததுவோ
வாமமலைக்கண்கள் மணிக்கருப்பையென்சொலுவேன்

சூரியனு மிந்திரனுந் தும்பிமுகத் தோனுமுங்கள்
பார மலையின் பகையடக்க வோபிறந்தார்

ஆலோ வயிறுதனி லாலிலைமேற் பள்ளிகொள்ளு
மாலோ வுரோம வகுப்பழகை யென்சொலுவேன்

வந்திச் சுழியை வலமாகச் சுற்றினுநீ
ருந்திச் சுழிகளுங்க ளுந்திச் சுழியாமோ

மெல்லிநல்லீருங்களிடை மின்கொடிபோ லுண்டெனவு
மில்லையென வும்படைக்க விரண்டு பிரமனுண்டோ

வாமமுதற் சாதி வடிவினு லல்குலுஞ்செந்
தாமரைப்பூப்போலிருக்குஞ் சந்தேகம்வேறுமுண்டோ

வாழைக் குறங்கல்குல் மண்டபமா மன்மதனுக்
கேழைக் கிரங்குமிட மென்றென் றறியேனே

செவ்வரால் கெளவிநின்ற சீரலவ னேமுழந்தாள்
அவ்வரா லைச்சுரத்த வாமையோ பொன்னடிதான்

அஞ்சு தலையாவோ விஞ்சுவா ரும்படமோ
மஞ்சுவரக் கண்ட மடமயிலோ வுன்சாயல்

பின்னழகைக் காணில்ரதிப் பெண்ணைமத னடுவனோ
முன்னழகைக் காணின் முனிவர்தவஞ் செய்வாரோ

சேடியரு மில்லாமற் றேன்மொழியீ ரிவ்வனத்தில்
நாடிவரப் பெற்றதுமுன் ஞன்செய்த மாதவமோ

ஏது மொருவார்த்தை யியம்புகிலீ ருங்களுரை
வேதமோ கல்லாலின் மேவுசிவ மந்திரமோ

மேரு கிரியுமந்த வெள்ளிமலை யும்பார்க்க
நீருந் தரிக நெகிழவிட மாட்டீரோ

கையணைவைத்துங்கள் கழுத்தின்மணமோந்துகொண்
ஐயமறச் சங்கமுக மாடும் பலனலவோ [டால்

புணைந்தது சற்றேற புறம்போகச் செய்துவிட்டால்
அநந்தசய னத்தலத்தை யானறிந்து கொள்ளேனே

தாகமற முத்தமொன்று தந்தா லுமதுசக்ர
வாக முலைக்குமுத்த மாலையாச் சூட்டேனே

என்மார் பிலங்கநக ரேகையைவைத் தாலுமது
பொன்மார் பிலங்கரந்த பூஷணமாப் பூட்டேனே

பாதி யுடலிற் பரமனொரு பெண்ணைவைத்தான்
மாதொருத்திதன்னை மணிவண்ணன் மார்பில்வைத்தான்

செங்கமலவேதனொரு தேன்மொழியை நாவில்வைத்தா
னுங்களை நானென் மனதுக்குள் ளிருத்திக்கொள்ளேனே

வாமத் தரவுமலை மந்தரமுந் தானுக
காமக் கடலை கடைந்தமிர்தங் காட்டேனே

பட்டாடைக் காமன்குளத் தையென்றன் பாரிசமா
விட்டான் முப்போக விளைவெற்றிக் கொள்ளேனே

வாழையடி மூக்காணி வட்ட மெனக்களித்தால்
ஏழை புழுதுபயி ரேற்றிப் பிழையேனோ

வற்றுச் சமுத்திரமா மார னரண்மனைக்குள்
அல்தாந் திமெழுதி யாண்மை செலுத்தேனோ

ஆலடிச் செப்பொடர சடிவட்டம் விட்டால்மூச்
சாலடித்து நல்லவெள்ளைச் சம்பா விளையேனோ

தாண்டு மிருகத் தனிவேட்டை வந்தவனை
மீண்டு மொருகாம வேட்டைவினை யாடவிட்டால்

கொங்கை மலைபற்றிக் குரவெழுப்பி யேறிடப
பொங்கு கலைதுலையப் புல்லுமரை யுள்ளாக்கி

சாய்ந்தவிழி மானிரண்டுஞ் சண்பகக்காட் டிற்குதித்துப்
பாய்ந்துகுமி ழோடொதுங்கி நின்று பரதவிகக

மோக வலைக்கு முயற்சிக்கு மின்புற
வாகபலைப் பிணறி யடுந்தொருகை பாரேனோ

மன்னிப்பா யென்னை வரவழைத்து நீபருது
கன்னிபபோ ரககை கலவிப்போர்க வெல்லைவிட்டகல்

காமத்தே ரேறிநன் றுக கட்டிடிது ககலந்து
தாமவேல பாயச் சமரின் மூனைகாட்டி

முன்னணியும் பின்னணியு மொய்த்த குழல்வகுப்பும்
பின்னிடநன னாலிடை பரநாபக் கொடியாட.

தண்டை யொலிமேளந் தான தெகிழ்ந்தகுழல்
வண்டு புறங்கொடுத்து மாற்றவர்கள் போற்பறக்க

வெப்பியெனைப் பாய்ந்தடா விட்டதன பாரமெனும்
கம்பமத யானைதனைக் கைப்பிடியா கப்பிடித்து

சங்க முழங்கச் சரிபோகப் போர்முடித்து
செங்கைக் கருப்புச் சிலைமதனை வெல்லேனோ

மெதுவாகத் தன்னைவிட்டு மேனியிலுள்ள தாம்பை[டஞர்
போர்த்துக்கள் யவ்வனமாய்ப் பொங்குதனி வெண்ணெய்

ஆடை பொருப்பக்க மனையிற் கிடக்கவிதழ்
மூடி யிரண்டு முளரிகளென் மார்பழுந்த

ஓர்தா மரைப்பூ வுகத்தென் முகத்தனைய
ஓர்தா மரைப்பூ விலாவிழுந்து கைத்தடவ

பின்னொரு செந்தாமரைப்பூப் பின்பிடரை யூடுவரக்
கன்னிலராற் சேரடு கலந்திடுப்பி னூடொதுங்க

என்மீது தாவி யிருகெண்டை போராட
மென்மா மலர்க்குழுக மெல்லமெல்லத் தேனூற

சைவலமோர் பாற்குலையச் சங்கொலிப்ப வீழ்ந்தெனது
மெய்குளிரத் தோய்ந்து விரகவிடாய் தீரேனோ

தங்க விளையாட்டுத் தனிப்பீட மீதுசது
ரங்கவிளை யாட்டுக் கழைத்திரே யாமாகில்

கால்பலன்கொண் டேற்றியிரு காரானை முட்டவிட்டு
நாலு முகத்து நடத்துபரி சுற்றவிட்டு

எட்டெட் டினிக்கு மிணங்கச் சவடேற்றித் [தேனோ
தொட்டதொட்ட வாட்டமெலாந் தோலாயல் வெல்லே

காதோடு வாதாடுங் கண்மடவீ ரொன்றியிலே
சூதாட வென்னைவரச் சொல்லியழைத் தீராகில்

குங்குமக்காய்ச் சோடிரண்டுங் கூட்டிக் கலந்தாடி
அங்கம் பசலைக்கா யத்தனையும் போகவிட்டு

விற்றை தருஞ்சிவப்பை மெல்ல வாதிருத்தி
அற்தக் கறுப்பையெல்லாம் பின்னே யலையவிட்டு

இருக்கா விருக்காலே டொப்பாது மாதும்
பெருக்கா வைக்கும் பிசகாம லேயாடி

கண்பார்த்து நீங்கள்வெட்டிக் கட்டித் தொடர்ந்தேறிப்
பணைபாக வீட்டிற் படுத்துவிளை யாடேனோ

நற்காம பூசை நடத்திடவே நீங்கள்சொன்னால்
விற்காம தெய்வ விரதந் தனிலிருந்து

மோக சமுத்திரத்தின் மூழ்குமதன் மந்திரமும்
ஆக வுருவேற்றி யந்தக் கரணமுடன்

கன்னலொடு தேமாங் கனியருந்திச் செவ்விளநீர்
தன்னைப் பருகிநித்ரைச் சத்துருவைத் தானகற்றி

சாமஞ்சா மந்தோறுஞ் சங்கரநா தத்துடனே
நேமமொடு பூசை நிறைவேற்றிக் கொள்ளேனோ

இந்நேர மெனசொற் கிரங்குவீ ரெப்படியும்
பின்னே யுரைக்கலந்து மேவாமற் போவேனோ

ஓடி யலைகட்டி யொதுகாம லேயொளித்தில
நாடிய பொன்பாவை நான்விட் டகலவேனோ

தாப்பான காடுந் தடவரையுஞ் சுற்றாமல்
வாய்ப்பாக வந்த மயிலைவிட்டுப் போவேனோ

விண்டுநறுந் தேன்சொரிய மென்கமலப் பூக்கண்ட
வண்டு படிந்துண்டு மகிழாமற் போவதுண்டோ

காந்தர்வ நியாயமெனக் கண்டவுட னேயிணங்கித்
தோய்ந்திடு கலியாண மகமேசுப மனையாருமன்றோ

கானாரும் வள்ளிதனைக் கந்தனார் கூடியதும்
மானாள் சுபத்திரையை வாள்விஜயன் கூடியதும்

தாங்களே சம்மதித்தோ தந்தைதாய் சம்மதித்தோ
மாங்குயிலே யென்னை மருவுவதே காரியங்காண்

மூலைக்கோட் டையுள்ளமுத்து மோகனமே யென்னை
நிலைக்கோட்டை வேந்தனென்று நீர்நா மறியீரோ

நானுநல புரியா ளுரியர் சிகாமணி நீ
தானு நவரத்ந மாலையென் றூழ்வாமோ

என்று பெருஞ் சூழ்கொண் டிரங்கு மழைக்கெதிரே
சென்று வருணை செபஞ்செய் வதுபோல

தன்னிடத்தில் வைத்தபயல் தாங்காதாட் சிச்சைசொல்லி
அன்னையிவைச் செங்கை கொடு வுயிர்க் குச்சேர்ந்தான்

பேகனெனும் பெருந்தைப் பெரியநா கேந்த்ரதுரை
நாகரிக மோக நவரத்ந மாலையுடன்

கொங்கலரு புன்னாக கொடியுற்ற மல்லிகையின்
பைங்கொடியு மாகப் படர்ந்தமணி மண்டபத்தில்

பூத்துச் சொரிந்தமலர்ப் பூப்பா யலின்மீது
வாய்த்த ரதியுமத மன்மதனும் போலிருந்து

செவ்விளை வருந்திச் செங்கைச் சுருள்பகிர்ந்து
கோவையிதழ் புகட்டிக் கொப்புமலர்ப் பூமுடித்து

கட்டி யணைத்து கனிவா யிதழ்பருகி
வட்ட முலைபிடித்து வண்ணத் துகில்நெகிழ்த்தி

ஆலிங் கனவிதங்க ளைந்தும் புரிந்தரவம்
போலுங் கடிதடமாம் பூவைக கனிவாக்கி

பொற்கொம்புப் பூங்கொடியும் பூண்டுதுவண் டாடுதல்
கற்று நவசிகா சாணைவகை பாராட்டி [போல்

குங்கும கதம்பமிடு கொங்கைகளின் கம்பதியா
பங்குவினி ருண்டகுழல் மஞ்சரிகள வீழ்ந்தசரிய

மைகருமுக பத்மமுக வட்ட மதி யற்பதிய
நெக்குருகி நெக்குருகி நெற்றிகளின முத்ததிர

பாகனைய வாய்மொழிகள் பாதிதடு மாறவொரு
பூதபிசை காடைகளை புறுவொலிகள் குகுகுவென

வரிவிழிகள் கடைபுரள மதுரவிதழ் வெளிறவிரு
பரிபுரமும் வளையுமிடை பதனமிடை பதனமென
ஆரியொன் றுகூடிரண்டு ளாசையொன் றுநேசமொன்று
மேவுசம்ப்ர தாயமொன்று வேளையிந்த்ர போகம்வந்து

அந்தவனு போகபர யானந்த சம்போகம்
தந்தசுகம் போகஞ் சரிபோக மாய்ப்பெருக

சோபவிடாய் தீர்த்துச் சுனைநீ ரளைந்துபிர
தாபவிடா யாறி யிருக்குந் தருணத்தில்

நவ்வியடி பற்றி நடந்தநிக ளங்கமல்லன்
செவ்வியடி பற்றிச் சேனு தளந்தொடர்ந்து

தென்ன னடிபரவத் தேடிவரு மேழ்கடல்போல்
மன்ன னிருக்கு மலர்க்காவில் வந்தணுகி

கண்ணாரக் காணுமுன்னங் காதாரச் சொற்கேட்டு
நண்ணார் புகழ்பெரிய நாகமகேந்த்ரதுரை

மின்னை நிறுத்திவரு மேகம்போன் மோகமின்னாள்
தன்னை நிருத்திவந்து தானைக்கெதிரானான்

கானிலிருந் தையன்வரக் கண்டோர் முகங்களெல்லாம்
பானு வரக்கண்ட பங்கயம்போ லாயினவே

கொண்டல் படிக்குங் கொடைப்பெரிய நாகேந்த்ரன்
தண்டிகையி லேறியந்த சண்பகப்பூங் காவகன்றான்

மந்திரிதள கர்த்தர்வர மாசேனை முன்னடக்கத்
தந்திரதுரை மக்களுடன் சந்தையூர்க் கேழுகமாய்

வந்து நவபுரியில் வாழு மகோபிலமால்
செந்திருவின் பாதமலர் சேவித்துத் தெண்டனிட்டு

தீர்த்த முடன்மாலைத் திருவடிபெற் றுண்மகிழ்ந்து
வார்த்தை தவறாதகண்டன் மால்யானை மீதேறி

நாவார நகரி நலன்னடை ஆடி நாகசாம்
பெரியகவேக காளை பெரியவே வாத்தொளிக்க

கஞ்சகியா கைப்பிரிப்பக் கட்டிடயாநுன் கைநீட்டிப்
பெருந்தளை நகைசிவநாத பாதாபதிக ளங்கபல்லா

[illegible] சண்ட ஜாய
[illegible]

[illegible]
[illegible]

[illegible] கதிர் [illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible] வொடி
[illegible] வார்

[illegible] கைப்பிடிசக
[illegible] வார்

[illegible] நிதங்கள்
[illegible] வார

[illegible] வேந்தன்
[illegible]

[illegible] குனிநங்க
[illegible] திருந்தாள

இங்கே துரைப்பெரிய நாகேந்த்ரன் வீற்றிருக்க
அங்கே மலர்க்காவி லன்னநடைப் பெண்பெருமாள்

பேராளன் பெனாசைப் பெரிய நாகேந்த்ர துரை
வாராமை கண்டு மதிமறந்து மெய்சோர்ந்தாள்

ஆனைதனைக் காணா தரும்பிடிபோய்ப் பார்ப்பதுபோல்
மானனையா ளந்தமலர் மண்டபமு நீர்ச்சுனையும்

தேடினாள் மூச்செறிந்தாள் செங்கமலத் தாள்சிவப்ப
ஓடினா ளெங்கோ னுருவெளியைத் தெண்டனிட்டாள்

என்னிடத்திற்கோப மேதென்றாளெழுந்திருந்தாள் [ள்
கன்னல்வளைத்தங்கொருவன் வந்தெதிர்க்கண்டயர்ந்தா

காடுருவக் காமனெய்த கைப்பாணம் தைத்துமலை
யூடுருவ வைவே லுருவியமான் போலுழன்றாள்

காலாயுதக் கொடியோன் கையா யுதவழியே
மாலா யுதமீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள்

பொற்பகலா மாதவியே புன்னையே சண்பகமே
கற்பகமே யென்னாசைக் கற்பகத்தைக் காணீரோ

முன்மான் பிணைநடக்க மோகமாய்ப் பின்றொடரும்
பொன்மானே யென்னாசைப் பூமானைக் காணீரோ

தோய்ந்த ரவியைத் தொடர்ந்த முகசூர்ய
காந்தமே யென்னாசைக் காந்தன்வரக் காணீரோ

என்னிடத்தின் மாலாகி யிச்சைசொல்லிச் சேர்ந்ததுரை
பின்னெனக்கோ ரந்தரங்கம் பேசாமற் போவானோ

கானிடத்தி னானுலவக் கண்டுதனி யாகவந்து
வானவர்கோ னென்னை மனமுருகிச் சேர்ந்தானோ

தந்திரிகொள் வீணை தனையொளித்து வந்துசெய்வ
கந்தருவ னென்னைக் கருத்துருகிச் சேர்ந்தானோ

இந்திரனே யானாற்கண் ணீரைஞ்ஞூ றென்பதுண்டே
கந்தருவ னேயானாற் கண்ணிமைக்கக் காரியமேன்

பெய்யுங் கொடையான் பெரியநா கேந்த்ரதுரை
ஐய னணைந்ததல்லா லையமினி வேறுமுண்டோ

மன்மதனை வென்று வயங்குந் திருவழகை
என்மனத்துக் குள்ளே யெழுதவோ வந்தகன்றான்

கூடியின் பங்கண்ட குதலைமொழிப் பேதைநம்மைத்
தேடி முகம்வாடித தியங்குவளென் றெண்ணானோ

இந்தக் கவடுசெய்வா னென்றறிந்தாற் கைகலக்கும்
முந்தக் குடிலமிட்டு மூன்றாணை கொள்ளேனோ

தன்னெஞ்சம் போலத் தழுவிப் பிரிந்திருக்க
வன்னெஞ்சி யென்றோ மறக்கத் துணிந்தானே

பேரூர் வழியேநாம் பின்றொடர்வோ மென்றாலும்
ஓரூரென் றானிலையே யொன்பதூ ரென்றானே

என்றிரங்கும் வேளை யிருஞ்சே வலைப்பிரிந்த
அன்றி லெனத்தானே சிறியா ளறிவயர்ந்தாள

இவ்விடத்தின் மெய்சோர்ந் திவள்கிடக்கவெவ்வேறாய்
அவ்விடத்திற் பூவெடுத்த வாயிழையா ரெல்லோரும்

குன்றிரண்டு தாங்குங் கொடிபோ லிடைதுவள
நின்று மலர்பறித்த நேரிழையைக் காணாமல

மற்றோர் வனமோநாம் வந்த தெனத்திகைத்துச்
சிற்றடியைக் கண்டார் திரண்டா ரொருமுகமாய்

சென்றார் தெருத்தூரந் தேன்மொழியே தேன்மொழியே
என்றார் மதிமறந்த வேந்திழையைப் பார்த்துக்கண்டார்

கையணையிற் சாய்ந்து கலைகுலையக் கண்ணுறங்கிப் பைந்
தையல் கிடப்பத் தரியாமற் பாங்கியர்கள்

தூக்கமோ வெம்பசியோ தோழியரைக் காணாத
ஏக்கமோ மன்மதன்கண் ணேறுபட்ட காரணமோ

தெய்வக்குறையோ நாம்செய்வினையோ வென்றேதிகைத்து
கையாற் கலைதிருத்திக் கட்டி யடுத்தணைத்தார்

மாந்தளிரால் வீசி மதிமுகத்தில் வேர்வை துடைத்தார்
ஏந்திழையாள் சோர்வைத் தெளிந்தெழுந்தாள் போலிருந்தாள்

ஒண்டொடியார் மங்கை யுடலிற் றுகிலிடங்கள
கண்டிதுவே யென்றுரைகள் சொல்லமுன் காயமுன்னேபோ

கைநடுங்கிக் காலொடுங்கிக் கன்னியர்கள் மேல்விழுந்து
மெய்நடுங்கிக் காதைவிட்டு ... கண்ணிற்றிரா

வல்லவையே கொங்கை படமேனிக் கைவைத்தென்
மெல்லமெல்லத் தாடைத்தி வீட்டுறு கொடியோனே

பாகார் மொழியாளைப் பஞ்சணையிற் சேர்த்திட்டுப்
போக வொட்டாமல் புசநடம் பொருந்தியே

முன்னை யணிவிளக்கண் மூச்செறியக் காய்ந்துருகி
மெனகுவளைக் கண்ணாரினை வெண்ணத்த வாறியதே

வீசியபோவை வம்பு மெழுகுபோ லைவக்குருகும்
கூசிகள்போற் பாயவுநக் கூசியுள் ளார்த்தனனே

கண்டு சகியார் கருத்திற் சகியாராய்
ஒண்டொடிகருச் சிந்தை வுபசாரம் செய்பவுற்றார்

செய்த வுபசாரமெலாந் தேனுன் பொருளாமி
வைது மடவாரை மனங்கொதித்துச் சொல்லுற்றாள்

வேடையெலாந் திரவென்மேல் வீசுவார் போலவெயிற்
கோடையெலா மென்மீதிற் கொண்டுவந்து விட்டீரே.

சாளரத்தை நீக்கித் தனிப்புலியைப் பாயவிட்டு
நீளுமலைத் தென்றலென்றீர் நிட்டூரஞ் செய்தீரே

காமரசமெல்லாங் கனகமஞ்ச மேற்பரப்பிப்
பூமலரென் றீர்மடவீர் பொய்யும் படித்தீரே

சேலென்ற கேதனத்தோன் றேமாலை யைப்பிழிந்து
பாலென்று தந்தீர் பழிகார ரானீரே'

மங்கைநல்லீ ரின்றென் வனமுலைக்கு நீரணிந்த
குங்குமமுஞ் சாந்துங் குளிர்ந்த பனிநீரும்

தேடும் பரத்தையர்பாற் காதலனைச் செல்லவிட்டு
வாடு மனையாண் மனம்போற் கொதிக்குதென்றாள்

என்னப் புலம்பி யிவள்படும்பா டத்தனையும்
அன்னைக்குச் சொன்னா ரவள்பதறி யோடிவந்தாள்

பெற்றெடுத்த தன்மகளைப் பேய்க்கிழவி யானாலும்
குற்றமற நோக்கிக் குறிப்புறவே கண்டுகொண்டாள்

செவ்வா யிதழ்க்குறியுஞ் செப்புமுலை மேற்பதித்த
கைவ்வா ளுகிர்க்குறியுங் கண்மை யழிந்ததுவும்

பார்த்தா ளுடன்போன பாங்கியரைச் சண்டையிட்டாள்
வேர்த்தாள் மகளை வெகுண்டாள் விசாரமிட்டாள்

நீங்களறி யாமலிந்த நேரிழையைப் பூங்காவில்
ஆங்கொருவன் கூடி யணைந்தவகைசொல்லுமென்றாள்

போனதுவும் வெவவேருய்ப் பூவெடுக்க யங்கைதனி
ஆனதுவுங் கண்டதுவு மாயிழையார் தாமுரைததார

சந்தமுலை பாருரைக்கத் தையல்குண மாலைசொல்வா
அந்த வனத்தி லசுகையுற்ற வேளையிலே

சுற்றி யடிபார்த்தேன் துறைநனடி போலதிலே
உற்றசங்கு ரேகை புடன்பதும ரேகைகண்டேன்

அச்சுவடு கண்டவசு கையுமல்லாற் புவனம்
மெச்சு திலகக்கோட்டை வேள்பெரிய நாகேந்த்ரன

வேட்டைக்கு வநதாரு மேளத் தொனியுமந்தக்
காட்டில வெடித்தொனியுங் காதாரக் கேட்டதெனரு

அப்படியோ சொலலென் னமிாதகுண மாலைமின்னே
செப்படிவித்தைத்தொழிலிற் சித்திரத்தைக்கண்டாளே

வண்டார் குழலாய மதன்பெரிய நாகேந்த்ரன்
கண்டாரு னினற கருப்பைவிட்டுப் போவாரு

அந்தத் துரையழகைக் கண்டாலு நானின்ற
பைந்தொடியுந் தானொருகை பாராமன் மீளவாளோ

எம்மை யறியாமலிவ ளெப்படித்தான் கைகலந்தான்
நம்மை யறியாமலந்த நாயகனெவ் வாறணைந்தான்

கன்ன மொருவரிட்டாற் காவலரு டேயுரைப்போம்
மன்னவனே யிந்த வலுமைசெய்தா லார்க்குரைப்போம்

பாகர் மொழியாளைப் பன்றிமலைச் சாரலுக்குப்
போகாதேயென்றுசொன்னேன் புத்தியைகேட்டாளோ

பேய்வார்த்தை யாரானும் பெற்றபிள்ளை கேட்பதுண்டு
தாய்வார்த்தை கேளாத் தங்கச்சி மூப்பாச்சே

தெண்டிக்கு மன்னவனைச் சேர்ந்தவளுக் காரியைதான்
தண்டிக்கப் போகாதே கள்ளியெனைக் கூடாதே

மானபரன் பெஞ்சை மகாராசனை மருவப்
போனவளே யன்றியிவள் பூவெடுக்கப் போனவளோ

வித்தைதரு மொன்பதூர் வேந்தனுக்கு மோகினிமா
மந்திரமுண் டென்றென் மதலை யறியாளே

தூயபுகழ் பெஞ்சைத் துரைக்குநமைப் போன்மடவார்
ஆயிரம்பே ருண்டெனவே றிரங்கி யறியாளோ

பூங்கொடிசூழ் தண்டலையிற் பூவெடுக்கப் போனவுயிர்ப்
பாங்கிமார் தாமிருக்கப் பாவைதனைச் சேயானோ

அந்நாளில் வேத னமைத்தபடி யேயொழிய
யின்றுரை நோவதுவும் வீணே பிதற்றுவதும்

நம்மை யறியாம னடந்ததெல்லாம் யாவருக்கும்
சமயமிக்குங் காரியமே தைய னடத்திவந்தாள்

மன்னழகுக் கென மகளே மனையாளாம்
கன்னியழ குக்குமந்தக் காவலனே காதலனும்

மாவடுக்கண் மங்கையென்ன மாதவமுன் செய்தாளோ
பூவெடுக்கப் போனாள் புதையலெடுத்து வந்தாள்

பையப் பழநழுவிப் பாலில் விழுந்ததுநான்
செய்ததவ மோமகளமுன் செய்தது சாபலமோ

என்று மகளை யிருகையாற் றன்றழுவி
யொன்றுக்கு மஞ்சாதே யோகமுமுன பாங்காச்சே

சிந்தமகூ ளேந்த்ரனருள் செய்பெரிய நாயகனைச்
சொந்தமாக் கக்கூடிச் சுகித்துமிக வாழ்ந்திரென்றான்

காவுலவு மின்னே கனகபல்லக் கேறியித்தப்
பூவுலகு கொண்டாடப் புத்திரரைப் பெற்றிரென்(

எந்தனுமன் வேளைசில வேத்திழையார் சூழ்ந்துவ
வன்னமணிப் பொற்சிவிகை வாயில்வரக் கண்டாரே

கண்டான் மகளைக் கனகபல்லக் கேற்றியின்பம்
கொண்டாள் குணமாலை கூடச் செலவிடுத்தாள்

சொற்படியே யத்தத் துரைப்பெரிய நாகையனும்
கற்பகத்தைக் கூடியவள் காதல்கொண்ட காதலியாய்

பூதலத்தோர் வாழ்த்தநல்ல புத்திரரைப் பெற்றெடுத்
பாது நவரத்ன மாலைமகிழ் வுற்றிருந்தான்

சீர்வாழி லோகஞ் செழித்துமிக வாழியொன்ப
தூர்வாழி வெள்ளை யுபய கொடிவாழி

பெஞ்சை நகர்வாழி பெரியநா கேந்த்ரதுரை
கஞ்சமலர் மாது கருணைபெற்று வாழியவே.

கூளப்பநாயகன் காதல்

முற்றிற்று.

ஆசான் அன்னியில் 60 நாளில் ஆர்மோனியம் வாசிக்கலாம்.
ஆர்மோனிய ஆசான் என்னும் சங்கிதக்களஞ்சியம் விலை அணு 2

த. துரைசாமி முதலியார்,
நெ. 45-கபினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் போஸடு, சென்னை.

சக்கரவர்த்தி அச்சுக்கூடம், 189, தங்கசாலை தெரு, சென்னை.

அகஸ்தியர்
பஞ்சபக்ஷி சாஸ்திரம்

ஆதியில் அருந்தமிழ் ஓதிவைத்த அகஸ்தியமக முனிவரருளிச் செய்த பஞ்சபட்சி சாஸ்திரமாகிய இவ்வரிய நூல் இதுவரையில் மூலமாக யிருந்ததை பண்டித சாஸ்திர வல்லவராகிய சாந்தலிங்க சுவாமிகளைக்கொண்டு நூதன உரை எழுதிவைத்தும் இதுவரையில் கடைவீதி புத்தகங்களில் விட்டுப்போன பஞ்சபட்சி படங்கள் கணி தாரூட சக்கிரம் காலசக்கரம் பூர்வபட்சவாரம் 1க்கு 60-நாழிகைக் குறிய பட்சிகள் வருமுறை சக்கரம், நட்சத்திரம் அமைத்து சுத்த மாக அச்சிட்டிருக்கின்றது.

இதன் விலை அணு 0 12 0

ஞானசார நூல் மூலம்-உரை

இதனுல் யோகசாதன முடையவர்களுக்கு அறிவிப்பது என்ன வென்றால் சங்கரனுர் உமைபவளுக்கு உபதேசித்த ஞானசார நூல மூலமும்-உரையும் தெய்வீகத தன்மை பொருந்திய ஔவையார் திருவாய் மலர்ந்தருளிய உயர் ஞானசாரநூல மூலமும உரையும் பிரமுக மது அருளிச்செய்த திருமெஞ்ஞானசாரநூல மூலமும் இம்மூன்றும ஒரே புத்தகத்தில் அச்சிட்டிருக்கிறது.

புத்தகம் விலை அணு. 0 4 0

போகமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய
● போகர் பஞ்சபக்ஷி சாஸ்திரம்.

நிமிஷப் பஞ்சபட்சி என்னும் சுருக்கு பஞ்சபட்சி சாஸ்திரம் மூலமும்-உரையும்.

இந்த மிக்க மேன்மை தங்கிய சோதிட சாஸ்திரங்களில ஒன்றென்பதை பூர்வீக சோதிடர் ளும இக்காலத்துச்சோதிடர் அனைவரும் மறிவார்கள்.

இதுவரையில்வடமொழியிலிருந்த இச்சாஸ்திரத்தை(சோதிடமணி தேவேந்திரன்) எனபவரால் சோபோகாரமாகும்படி பாட்டும் மிக எளிய தமிழ் நடையில உரையையும எழுதி அடியிற்கண்டவமமால் அச்சிடப்பட்டிருககினறது.

இதன் விலை அணு. 0 14 0

வால்மீகர் ஆரூட சாஸ்திரம் 150-பாடல் மூலமும்-உரையும். 0 8 0

உரோமரிஷி விராடிபஞ்சபட்சி மூலம்-உரை 1 4 0

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 45, கபிணியப்ப நாய்க்கன் தெரு, பி. டி. போஸ்டு, சென்னை.

புத்தக விளம்பரம்.

	ரூ.	அ.
கம்பராமாயண பாலகாண்டம் பாட்டு உரை	3	8
பட்டினத்தார்பாடல் உரை	1	8
தாயுமான சுவாமி பாட்டு உரை	3	4
விநாயக புராண வசனம் கிளேஸ் காலிகோ பைண்டு	4	0
தனிப்பாடற்றிரட்டு பாட்டு உரை	2	0
வேதாரணிய ஸ்தலபுராண வசனம்	0	8
அறப்பளீசுர சதகம் உரை	0	12
குமரேச சதகம் உரை	0	12
மகமாரி அம்மன் பூசாரி பாட்டு	0	4
பாண்டியகாஸ் [illegible]	0	5
மலையாள மாந்திரீக [illegible]	0	4
கதை புத்தகங்கள்		
அற்புத பூலோக ரம்பை கதை படத்துடன்	1	0
[illegible] கதை	0	8
ஸ்திரீ புருஷ ரகசியம்	1	0
ஆயிரத்தொரு ராத்திரியில் சொல்லிய பாரிசக்கதைகள்	2	0
நாகபூஷணம் தமிழ் நாவல்	0	12
டிராமா புத்தகங்கள்		
கோவிலன் சரித்திரம்	0	4
சாவித்திரி சரித்திரம்	0	4
நல்லதங்காள் சரித்திரம்	0	4
பவளக்கொடி சரித்திரம்	0	4
அல்லி சரித்திரம்	0	4
வள்ளியம்மை திருமணம்	0	4
வைத்திய புத்தகங்கள்		
புலஸ்திய மகாரிஷி வாத சூத்திரம்-300	0	12
உரோமரிஷி சூத்திரம் 100	0	4
ஆயுள்வேத சுருக்கம்	0	12

	ரூ.	அ.
அகஸ்திய முனிவர் பூரண சூத்திரம் 216-பாடல்	0	8
தேரையர் வைத்தியம் 100 பாடல்	0	4
பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200	1	0
ஊர்வசி வயித்திய சிட்கா	0	8
இரண்டாம் பாகம்	0	8
வைத்திய சூரன் பழமொழி விளக்கம்-108	0	6
திருவள்ளுவ நாயனார் சூஸ்திரம்-16 வெட்டியார் இயற்றிய பஞ்சரத்தினத் திருப்புகழ்-11 சோதனை	0	2
புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம்	0	8
திருவள்ளுவ நாயனார் பரிமுப்பு சூத்திரம்-30	0	2
சோதிட புத்தகங்கள்		
நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும்	0	12
வீமகவி பாட்டு உரை	1	0
சுகர்நாடி சோதிடம்	1	0
[illegible]மரமுனிவர் சோதிட கேரளம்	0	12
சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன்	2	0
கணித முருகசேகரம்	1	0
ஹோராசாஸ்திரம்	1	0
கௌசிகசிந்தாமணி 1-பாகம்	1	0
மேற்படி 2-பாகம்	1	0
மேற்படி 3-பாகம்	1	0
சோதிட [illegible]	0	4
சாவு கணக்கின்பலன்	0	4
கனவுகாணும் சாஸ்திரம்	0	[illegible]
மணிமந்திர வைத்திய சேகரம்	1	0

ஆர்மோனிய ஆசான் சங்கீத களஞ்சியம் 2 0